(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(15).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மே 31 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2023 யூன் 08, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— “2019 நவம்பர் தொடக்கம் இன்று வரையிலான காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும் அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு” தாபிக்கப்படுதல் பற்றிய தீர்மானத்திற்கான திருத்தம்,— 2023 மே 26 ஆம் திகதி நடத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், 2023 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் உரியமுறையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்:—

பெயர் :

பெயர் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

> “அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு”;

I ஆம் பகுதி:

இரண்டாவது பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

> “நிதி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளினால் அல்லது அமைச்சரவையினால் வேண்டுமென்றே இப் பொருளாதாரக் குற்றம் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் புலனாய்வு செய்ய வேண்டியது பாராளுமன்றத்தின் பொறுப்பு என்பதாலும்;”

மூன்றாவது பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

> “வரி நிவாரணங்களை வழங்குதல், கடன் தவணைகளைச் செலுத்தாதிருத்தல், இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்தல், ரூபாயின் பெறுமதியை துரிதமாக மதிப்பிழக்கச் செய்தல், உத்தியோகபூர்வ பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைதல், நாட்டின் பணவீக்கமானது உச்ச பணவீக்க மட்டம் வரை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தல் போன்ற காரணிகள் இந்நாட்டின் நிதி வங்குரோத்து நிலைக்கு காரணங்களாக அமைந்துள்ளதாலும்;”

மூன்றாவது பந்தியின் (அ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

> “(அ) இதுவரை எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடியையும் நிதி வங்குரோத்து நிலையையும் நாடு எதிர்கொண்டமையானது, அது தொடர்பில் பொறுப்பு வகித்த ஆட்கள் தமது பணியை உரியவகையில் மேற்கொள்வதற்குத் தவறியதன் காரணத்தினால் இடம்பெற்றதா என்பதையும்;”

மூன்றாவது பந்தியின் (ஆ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

"(ஆ) குறிப்பிட்ட வங்குரோத்து நிலையைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனரா என்பதையும்;"

மூன்றாவது பந்தியின் (ஈ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:-

"(ஈ) அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளையும் நிதி வங்குரோத்து நிலையையும் எதிர்கொள்வதற்கு பங்களிப்புச் செய்த இதர விடயங்கள் இருந்தனவா என்பதையும்;"

மூன்றாவது பந்தியின் (உ) பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பகுதி பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:—

"(உ) எதிர்காலத்தில் அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கும் நிதி வங்குரோத்து நிலைக்கும் நாடு தள்ளப்படுவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய இதர விடயங்கள் இருக்கின்றனவா என்பதையும்; மற்றும்"

"மேலே திருத்தப்படாத, 2023 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் உரியமுறையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஏனைய பகுதிகள் மாற்றமடையாதிருக்கும்.".